

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றியபோது.. உடன் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், த.வேணுகோபால், தி.அ.முகமது சகி, ஐ.கென்னடி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரைஎம்.பி. மணிமாறன் முனிவேல், இரா.ஸ்ரீதரன், கு.கருணாநிதி, மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, பொன்.முத்து, கே.ஆர்.சீதாபதி, ஆர்.சிவானந்தம், வ.அன்பழகன், கே.வி.ராஜ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், ஆர்.வேல்முருகன், பிரியா விஜியரங்கன், ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், டி.ஏ.தட்சணாமூர்த்தி, விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, க.சௌந்தரராசன், பார்வதிசீனுவாசன் சிவ.ஜெயராஜ், ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் உள்ளனர்.

### மாவட்டத்திற்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

# கிராமப் பொருளாதாரத்தை உயர்த்திட்ட முதல்வருக்கு பாராட்டு!

### திருவண்ணாமலை தெற்கு - வடக்கு மாவட்டக் கழகக் கூட்டத் தீர்மானங்களை விளக்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, அக்.8 -

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் தந்து, கிராம பொருளாதாரத்தை உயர்த்திட்ட முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தருகிறார். அவருக்கு எழுச்சியான வரவேற்பு அளிப்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை விளக்கி, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நேற்று (8.10.2023) நடைபெற்றது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால் தலைமை வகித்தார். சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்கள் முன்னிலை வகித்தார். வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், மாவட்ட கழகச் செயலாளருமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அது வருமாறு:-

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் சு.பழனிவேல், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் இர.சீனிவாசன் அவர்களின் மறைவிற்கு இந்த மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவரும், முதலமைச்சருமாகிய மு.க. ஸ்டாலின் அவர்கள், அக்டோபர் 21, 22 ஆகிய தேதிகளில் நமது மாவட்டத்திற்கு கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தருகிறார்.

வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம், திருவண்ணாமலையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டம் திருவண்ணாமலையில் நடைபெறுவதற்கு வாய்ப்பு வழங்கிட்ட கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமா கிய மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் எழுச்சியாகவும், சிறப்பாகவும் நடத்திட, இந்த மாவட்ட கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இக்கூட்டத்தில் நமது மாவட்டத்தில் உள்ள 8 தொகுதிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டுமென இந்த மாவட்ட கழகம் தீர்மானிக்கிறது.

திருவண்ணாமலையில் நடைபெறும் வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்திற்கு கழக நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும் கழகத்தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எல்லையிலும், அவர் கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் எழுச்சியான வரவேற்பு அளித்திட மாவட்ட கழகம் தீர்மானிக்கிறது.

ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட்ட, கிராமங்களின் பொருளாதாரத்தை உயர்த்திட்ட, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை-யினை தந்திட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞரின் வழிதோன்றலான, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, இந்த மாவட்ட கழகம் பாராட்டி மகிழ்கிறது.

**வாக்காளர் பட்டியல் திருத்தப் பட்டியல்!**

1.0.2024 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளக கொண்டு தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட, வரைவு வாக்காளர்க பட்டியலை தேர்தல் ஆணையம் அக்டோபர் 27 அன்று வெளியிடவுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும், நீக்கவும், திருத்தம் செய்யவும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்த நவம்பர் 04, 05, 18 மற்றும் 19 ஆகிய தேதிகளிலும், தேர்தல் ஆணையம் மூலம் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. எனவே சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள்,

குறிப்பாக நமது கழகத்தின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் ஆகியோர் இந்த முகாமினை பயன்படுத்திக்கொண்டு, தங்கள் வாக்குச்சாவடியில் உள்ள போலி வாக்காளர்கள் நீக்குதல், 18வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை சேர்த்தல், வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்தல் பணிகளில் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, இப்பணியினை செய்திட இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

**சமூக ஊடகங்கள் மூலமாக மக்களைச் சந்திப்பீர்!**

நமது மாவட்டத்தில் அனைத்து விதமான கூட்டுறவு சங்கங்களுக்கும் விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே கூட்டுறவு சங்கங்களில், உரிய சான்றுகளை வழங்கி கழகத்தின் சார்பில் அதிக உறுப்பினர்களை சேர்த்திட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள் விழிப்புடனும், விரைந்து பணியாற்றவும் இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

நமது கழகத்தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு சிறப்பு திட்டங்கள் மூலம் எல்லோருக்கும் எல்லாம் என்கிற முறையில் திராவிட மாடல் ஆட்சியினை நடத்தி வருகிறார். "தாயுள்ளம் கொண்ட தலைவர்'' என உலகமே வியக்கும் வகையில், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான காலை சிற்றுண்டி திட்டம் தொடங்கி வெற்றிக்கரமாக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தினை உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் தங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளில் நேரடியாக சென்று, ஆய்வுகளை மேற்கொண்டு, இத்திட்டம் முழுமையாகவும், சிறப்பாகவும் நடைபெற்றிட உறுதுணையாக இருந்திட வேண்டுமெனவும், இத்திட்டத்தின் நன்மைகளை நாட்டு மக்களுக்கு எடுத்து காட்டிட, ஒவ்வொருவரும் சமூக ஊடகங்கள் மூலமாக மக்களை சென்றடையுமாறு பணியாற்றிட, மாவட்ட கழகம் கேட்டுக்கொள்கிறது.

**மகளிர் மாநாட்டை வெற்றியடையச் செய்வீர்!**

அக்டோபர்- 14 அன்று சென்னையில் நடைபெறும், திமுக மகளிர் அணி மாநாட்டில் காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா காந்தி, பிரியங்கா காந்தி மற்றும் அகில இந்திய பெண்தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

பெண்களுக்காக நடைபெறும் ஆட்சி என வியக்கும் அளவிற்கு, மகளிருக்கு தினம், தினம் சிறப்பான திட்டங்களை தந்து கொண்டு இருக்கும், திராவிட மாடல் அரசுக்கு வலிமை சேர்க்கும் வகையில், நமது மாவட்டத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக திமுக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் மற்றும் பெண் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆயிர கணக்கில் கலந்து கொண்டு, மாநாட்டினை வெற்றியடைய செய்யுமாறு இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

நமது மாவட்ட கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டு, தலைமை கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, வாக்குச்சாவடி பணிக்குழு உறுப்பினர்கள் சிலரின் அலைபேசி எண்கள், தலைமைக் கழகத்தால் தொடர்பு கொள்ள முடியாமல் உள்ளது.

சம்மந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் உடனடியாக, இதில் கவனம் செலுத்தி சரியான அலைபேசி எண்களை வழங்கிடுமாறு இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் பொறுப்பாளர்கள் தி.அ.முகமது சகி, கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், வர்த்தகர் அணி துணைச் செயலாளர் ஐ.கென்னடி, மணிமாறன், முனிவேல், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன். முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அத்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.ஆர்.சீதாபதி, ஆர்.சிவானந்தம், ஆர். வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் க. லோகநாதன், ஜெயராணி ரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன்,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி(எ) எஸ். விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, ஜெ.மெய்கண்டன், இரா. கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந.நரேஷ் குமார், கோ.எதிரொலி மணியன், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ்.டி. கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ்.சாந்த குமார், ப.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினி வினோத்தி வாகரன், இராணிவேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ. சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ. ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம். சுந்தர், எஸ்.மோகன், து. மாமது, ஏ.ஞானவேல், என். சங்கர், எம்.தினகரன், ஜெ. கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள், ப. இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி. வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா, தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே. அன்பு, ப.முருகையன், மு. அன்பழகன், எம். சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவர்தணன், வேணி ஏழுமலை ஒன்றியக்குழு, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் உட்பட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக வடக்கு மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன் நன்றி கூறினார்.

# செம்பரம்பாக்கம் ஏரியில் 100 கனஅடி உபரி நீர் திறப்பு!

சென்னை, அக்.8-

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து இன்று 100 கனஅடி நீர் உபரி நீர் திறக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான 24 அடி கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் தற்போது 21.96 அடியாக உள்ளது. 3 ஆயிரத்து 645 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட ஏரியில் தற்போது 3 ஆயிரத்து 110 மில்லியன் கன அடி நீர் உள்ளது. ஏரிக்கு வரும் நீர்வரத்து 231 கனஅடியாக உள்ள நிலையில், நீர் பிடிப்பு பகுதிகளில் அவ்வபோது மழை பெய்து வருகிறது. இதனால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து இன்று காலை 10 மணியளவில் 100 கனஅடி உபரி நீர் திறக்க பொதுப்பணித் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். உபரிநீர் திறக்கப்பட உள்ளதால், சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர். திருமுடி வாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் கரையின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

### தமிழ் வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு மறைவு!

# தன்னலம் கருதாத, தமிழ் நலம் காக்கும் ஒரிசா பாலுவின் உழைப்பும் ஆர்வமும் என்றும் மதிக்கப்படும்!

### மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, அக். 8-**

**தமிழ் வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தன்னலம் கருதாத, தமிழ் நலம் காக்கும் ஒரிசா பாலுவின் உழைப்பும் ஆர்வமும் என்றும் மதிக்கப்படும்!'' என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ் வரலாற்று ஆய்வாளரான ஒரிசா பாலு (எ) சிவபால சுப்பிரமணி அவர்கள் மறைந்த செய்தியால் வேதனையடைந்தேன்.

ஒரிசா பாலு அவர்கள் தமிழர்களின் வரலாற்றுத் தொடர்புகளைக் கடல்வழியே தேடிக் கண்டு வெளிப்படுத்துவதில் மிகுந்த முனைப்புடன் செயலாற்றி வந்தவர் ஆவார். தன்னலம் கருதாத தமிழ் நலம் காக்கும் அவரது உழைப்பும் ஆர்வமும் என்றும் மதிக்கப்படும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், நண்பர்கள், தமிழன்பர்கள் ஆகிய அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு அரசின் தொடர் நடவடிக்கையால் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் சாத்தியமாகும்!

# அடுத்த 7 ஆண்டுகளில் இலக்கை அடைய முடியுமென பொருளாதார நிபுணர்கள் கணிப்பு!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் தகவல்!

சென்னை, அக்.8-

தமிழ்நாடு அரசின் தொடர் நடவடிக்கை காரணமாக, 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது சாத்தியமான ஒன்று தான். இதே வேகத்தில் பயணிக்கும் போது அடுத்த 7 ஆண்டுகளில் நம்மால் இலக்கை அடைய முடியுமென பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளனர் என "தினகரன்'' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்யவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஜிடிபி 2030ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்பது முதலமைச்சரின் லட்சிய கனவாக உள்ளது. அந்த இலக்கை நனவாக்க, தமிழ்நாடு அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் வெளி மாநில மற்றும் வெளிநாட்டு தொழில்முனைவோரின் முதலீடுகளை ஈர்க்க, தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில், ஐக்கிய அமீரகத்திற்குச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முதலீடு திட்டங்களை மேற்கொண்டார். தைவான் காலணி தயாரிப்பு நிறுவனமான ஹாங் பூவின் தலைவரான டி.ஒய். சாங் மற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

தற்போது, சென்னை போரூரில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹிட்டாச்சி குழும துணை நிறுவனமான ஹிட்டாச்சி எனர்ஜி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மையம் மற்றும் புத்தாக்க மையத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார். 3 லட்சம் சதுரடியில் அமைய உள்ள இந்த புத்தாக்க மையத்தின் மூலம் 2,500 பேருக்கு உயர் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது, மாநிலத்தின் பொருளாதாரம் சுமார் 290 பில்லியன் டாலர் ஆகும். 2022-23 பட்ஜெட் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளபடி, 2021-22க்கான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) மதிப்பு ரூ.21,79,655 கோடி ஆக உள்ளது. 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைய ஒரு ஆண்டிற்கு 1313.5% வளர்ச்சி தேவைப்படும். முதல் ஆண்டில் நமது மாநிலத்தில் வளர்ச்சி 14.5% ஆக உள்ளது. நமக்கு சிறப்பான தொடக்கம் கிடைத்துள்ள தால், அடுத்தடுத்த ஆண்டுகளில் மாநிலத்தின் வளர்ச்சி 14% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக உள்ள குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில்களின் மேம்பாட்டுக்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இத்துறையின் வளர்ச்சி வரும் ஆண்டுகளில் வளர்ச்சி 12% ஆக இருந்தால் கூட மாநில பொருளாதாரம் 750 பில்லியன் டாலராக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி, மின் வாகனங்கள், தோல் அல்லாத காலணிகள், பின்டெக், ஜவுளி, பாதுகாப்பு உற்பத்தி ஆகியவற்றுக்கும் தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஐடி மற்றும் ஐடி தொடர்பான தொழில்களை இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களுக்கு எடுத்துச்செல்வதிலும் தமிழ்நாடு அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

பின்னலாடை நகரமான



தினகரன்

அக்டோபர் 7, 2023 சனிக்கிழமை

அரசின் இலக்கு

தமிழ்நாட்டில் முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்யவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் ஜிடிபி 2030-ம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்பது முதலமைச்சரின் லட்சிய கனவாக உள்ளது. அந்த இலக்கை நனவாக்க, தமிழ்நாடு அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் வெளிமாநில மற்றும் வெளி

திருப்பூரில் ஜவுளி மையம் உருவாக்கவும், உணவு பதப்படுத்துதல் தொழிலுக்கும் அரசு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும் தமிழ்நாடு அரசு முனைப்பு காட்டி வருகிறது. அனைவருக்கும் வளர்ச்சி என்பதில், தமிழ்நாடு அரசு முக்கியத்துவம் கொடுத்து, பொருளாதார வளர்ச்சியை கைவிட்டு விடக்கூடாது என்பதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.


தமிழ்நாடு அரசின் இந்த தொடர் நடவடிக்கை காரணமாக, 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்பது சாத்தியமான ஒன்றுதான், இதே வேகத்தில் பயணிக்கும் போது அடுத்த 7 ஆண்டுகளில் நம்மால் இந்த இலக்கை அடைய முடியும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திராவிட மரம் போல் நிமிர்ந்து நில்!



மரமே உன்னை வணங்குகிறேன்!
திராவிட மரம் போல் நிமிர்ந்து நில்!
எழுத்தை நேசிக்கும்
எவரொருவரையும் போல்,
அடர்ந்து படர்ந்த மரங்களைப் பார்த்து
மயங்கியிருக்கிறேன் பலமுறை!
சுழன்றடிக்கும் காற்றில் விழுந்து விடாமல்,
வீழ்வேனா நானென்னும் பேரிரைச்சலோடு,
தலைவிரி கோலமாய்த் தலையாட்டும் மரம் பார்த்து
பயந்திருக்கிறேன் சிலமுறை!
வருண பேதமெல்லாம் கிடையாது மரத்துக்கு!
ஐந்தறிவு உயிரையும், ஆறறிவு உயிரையும்
சரிசமமாய் பாவிக்கும்.
மரங்களின் தாலாட்டில்கண் துயிலும் பறவையினம்.....
மரங்களின் நிழலில் ஓய்வெடுக்கும் மனித இனம் !
மரம் இயற்கையின் வரம்.... பல்வேறு தருணங்களில்
இதை உணர்ந்திருக்கிறேன்என்றாலும்,
பல்லுயிர் காக்கும் அரும்பெரும் மரத்தை
ஊட்டி தான் நமக்கு காட்டி இருக்கிறது.
எங்கோ ஆழத்தில் மணலற்ற மலை இடுக்கில்
போராடிப் போராடித்தான் முளைத்திருக்கும் அது !
எத்தனையோ இன்னல்களை முறியடித்துப் பிழைத்திருக்கும் !
அந்த மரம் தான் பாதாள பலி கேட்டுக்கீழ்நோக்கிச்
சரிந்த பேருந்தைக் கிளைக்கரங்களால் தாங்கிப்பிடித்து
நம்மைத் திகைக்க வைத்திருக்கிறது!
கோபாலபுரத்தின் இளைஞரைத் திரட்டி,
திராவிட உணர்வு வீழ்ச்சியடையாமல்
தமிழ் மண்ணெங்கும் காத்த இளைஞனைப் போல்,
தன் வலி மறந்துதாங்கிப் பிடித்திருக்கிறதுஊட்டி விருட்சம்.
சனாதனம் மதமென்றால்திராவிடம் மரம்.
தாழ்ந்து கிடப்போரைத் தாங்கிப் பிடிப்பதால் தான்
ஓங்கி வளர்கிறது ஒவ்வொரு முறையும்!
'மரம் மாதிரி நிற்காதே' என்பது பொய் மொழி.
"திராவிட மரம் போல் நிமிர்ந்து நில்" _ என்பதுதான்
ஊட்டி தீட்டும் உணர்வுள்ள பொன்மொழி!



புலவர்
**இந்திரகுமாரி**